

சிறந்த மருத்துவக் கல்லூரிக்கான ரவரிசைப் பட்டியலில் 12வது இடத்தில் சென்னை மருத்துவ கல்லூரி

சென்னை, ஜூன் 12–

ந்த மருத்துவக் கல்லூரிக்கான ிசைப் பட்டியலில் 12வது தில் சென்னை மருத்துவ கல்லூரி பிடித்துள்ளது.

தியாவில் உள்ள உயர் கல்வி னங்களை உலகத் தரத்துக்கு தும் நோக்கில், கல்வி னங்களிடையே போட்டியை ாக்க தேசிய அளவிலான ிசைப் பட்டியலை மத்திய வள மேம்பாட்டு அமைச்சகம் 2016ம் ஆண்டு முதல் ியிட்டு வருகிறது. இதற்கான நிறுவன தரவரிசை கட்டமைப்பு ஆர்எப்) என்ற அமைப்பு ாக்கப்பட்டது. மாணவர்கள் ி விகிதம், கற்பித்தல், கற்றல், கள், ஆராய்ச்சி, தொழில்முறை ி உள்ளிட்ட 11 அம்சங்களை ண்டு தரவரிசை உருவாக்கப்படும். ன்படி, 2020ம் ஆண்டுக்காக ல்வி தரவரிசை போட்டிக்காக கத்தில் இருந்து 260 கல்வி னங்கள் உள்பட நாடு வதும் 1,667 கல்வி நிறுவனங்கள் ற்றன. இந்நிலையில், தரவரிசை பட்டியலை மத்திய அமைச்சர் ரமேஷ் பொக்ரியால் நேற்று வெளியிட்டார்.

அதில் ஒட்டுமொத்த உயர் கல்வி நிறுவனங்கள் பட்டியலில் சென்னை ஐஐடி முதலிடம் பிடித்துள்ளது. இதற்கு அடுத்த இடத்தில் பெங்களூர் இந்திய அறிவியல் கழகமும், டெல்லி ஐஐடி மூன்றாம் இடமும் பிடித்துள்ளன.

2018ல் 10வது இடத்தில் இருந்த அண்ணா பல்கலைக்கழகம் 2019ல் 14வது இடத்துக்கு தள்ளப்பட்டது. இந்த நிலையில், மீண்டும் பின்னுக்குத் தள்ளப்பட்டு 20வது இடத்தில் உள்ளது. பல்கலைக்கழக தரவரிசையிலும் 7வது இடத்தில் இருந்து 12வது இடத்துக்கும், பொறியியல் கல்லூரிக்கான தரவரிசையிலும் 9வது இடத்தில் இருந்து 14வது இடத்துக்கும் அண்ணா பல்கலைக்கழகம் தள்ளப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்த உயர் கல்வி நிறுவனங்களில் பாரதியார் பல்கலைக்கழகம் 21வது இடத்திலேயே உள்ளது. சென்னை பல்கலைக்கழகம் 33வது இடத்தில் இருந்து 41வது இடத்துக்கும், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் 47லிருந்து 64க்கும், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் 69லிருந்து 84வது இடத்துக்கும் வந்துள்ளன.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம் 86வது இடத்தில் இருந்து 77வது இடத்துக்கு முன்னேறியுள்ளது. இதுதவிர முதல் 100 இடங்களில், அமிர்தா விஸ்வ வித்யாபீடம் (13), திருச்சி என்ஐடி (24) வேலூர் விஐடி (28) உள்ளிட்ட 18 நிறுவனங்கள் உள்ளன.

கல்லூரிகளுக்கான தரவரிசையில் மாநிலக் கல்லூரி 3வது இடத்தில் இருந்து 5வது இடத்துக்கு இறங்கியுள்ளது. அடுத்தபடியாக லயோலா கல்லூரி (6), கோவை அரசு கலைக் கல்லூரி(34) உள்ளிட்ட 32 கல்லூரிகள் 100 இடத்துக்குள் உள்ளன.

மருத்துவக் கல்லூரிக்கான தரவரிசையில் சென்னை மருத்துவ கல்லூரி 12வது இடத்தில் உள்ளது. முதல் 40 இடங்களில் 7 தனியார் கல்லூரிகள் இடம்பெற்றுள்ளன.

தமிழகத்தின் ஊர்ப் பெயர்களுக்கு ஆங்கில மொழி திருத்தப் பட்டியல்: அரசுக்கு தமிழியக்கம் நன்றி, வாழ்த்த

தலைவர் ஜி.விசுவநாதன் அறிக்கை

வேலூர், ஜூன். 12–

தமிழக அரசு வெளியிட்டுள்ள தமிழக ஊர்ப் பெயர்களுக்கான ஆங்கில மொழி திருத்தப் பட்டியலுக்கு தமிழியக்கம் வரவேற்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த இயக்கத்தின் தலைவரும், விஐடி வேந்தருமான ஜி.விசுவநாதன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

தமிழ், தமிழர்களின் தனித்த அடையாளங்களை மீட்டெடுக்கும் முயற்சியில் தமிழக அரசு, கடந்த 201819 நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டபடி, தமிழகத்தின் ஊர்ப்பெயர்களைத் தமிழில் எழுதுவதைப் போலவே ஆங்கிலத்திலும் எழுத வேண்டும்; தமிழில் ஒலிப்பது போலவே ஆங்கிலத்திலும் ஒலிக்க வேண்டும்; எடுத்துக்காட்டாக 'TRIPLICANE' என்று எழுதுவதும் ஒலிப்பதும் கூடாது. திருவல்லிக்கேணி என்று தமிழில் எழுதுவதைப்போலவே ஆங்கிலத்திலும் 'THIRUVALLIKKENI' என்று எழுதப்பெற்று, அவ்வகையிலேயே ஒலிக்க வேண்டும் என்ற அரசாணையை அரசிதழில் 1150 ஊர்ப்பெயர்களுக்கான பெயர் திருத்தப் பட்டியலையும் தமிழக அரசு 10.06.2020 அன்று வெளியிட்டிருப்பதை தமிழியக்கம் மனதாரப் பாராட்டுகிறது.

'MADRAS STATE' என்பதைத் தான் ஆட்சிக்கு வந்தவுடனேயே 1967 இல் தமிழ்நாடு எனப் பெயர் மாற்றம் செய்யச் சட்டப்பேரவையில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றித் தாய்க்கே பெயர் சூட்டியப் பெருமகன் என்ற பெருமையைப் பேரறிஞர் அண்ணா பெற்றார்.

பேரறிஞர் அண்ணாவின் பெயரில் இயக்கம் தொடங்கிய புரட்சித் தலைவர், நிலைநிறுத்திய புரட்சித் தலைவியின் பெயரால் ஆட்சிப்பொறுப்பை ஏற்று நடத்தும் எளிமைச்சாமி என எல்லா பாராட்டப்பெறும் முத எடப்பாடி பழனிச்சாமிக்கும், வளர்ச்சித் துறை அமைச்சர் ம பாண்டியராஜக்கும் பெயர் இ சீர்திருத்த நடவடிக்கைக் தமிழியக்கம் நன்றி பாராட்டுகிறது

ஊர் பெயரைப் போ தமிழகத்தின் பெ 'TAMILNADU' என்றழைப்ப மாற்றாக 'THAMIZHNA என்றெழுதப்படுதல் வேண் தமிழ்நாடு என்றே அழைக்க வேண்டும் என்பதற்கும் ஒரு அரசாணையை வெளியி தமிழியக்கம் தமிழக அ வேண்டுகிறது.

அடிமைப்படுத்திய ஆங்கிலத் ஊர்ப்பெயரில் ம கொண்டுவந்து தமிழில் ஒ ஒலிக்க ஆணையிட்டதைப் மிடிமைப்படுத்திய வட ஊர்ப்பெயர்களை முன்னோர் த ஒலித்ததைப்போல, எடுத்துக்கா விருத்தாச்சலம், திருமுதுகு என்றும்வேதாரண்யம்,திருமறை என்றும் அழைக்கப்டுவதற்கு அரசாணை வழங்கும்படியும் த அரசை தமிழியக்கம் வே கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு கோ. விசுவநாதன் அறிக்கையில் கூறியுள்ளார்.

ட்டாண்மை நிறுவனங்களை இணைய வழி மூலம் பதிவு செய்யும் வசதி புதுப்பொலிவுடன் அமல்

திவுத்துறை தலைவர் பா.ஜோதி நிர்மலாசாமி தகவல்

சென்னை, ஜூன்.12

ட்டாண்மை நிறுவனங்களை ணையவழி மூலம் பதிவு ும் வசதி புதுப்பொலிவுடன் ல்படுத்தப்பட்டுள்ளதாக த்துறை தலைவர் பா.ஜோதி லாசாமி தெரிவித்துள்ளார்.

ு குறித்து பதிவுத்துறை வர் பா.ஜோதி நிர்மலாசாமி ியிட்டுள்ள செய்திக் பில் கூறியிருப்பதாவது:–

ய கூட்டாண்மை நிறுவனச் ம், 1932ன் கீழ் கூட்டாண்மை னங்கள் மாவட்டப்பதிவாளரால் பதிவு செய்யப்பட்டு உரிய பதிவுச் சான்று வழங்கப்படுகிறது. இந்த கூட்டாண்மை நிறுவன பதிவு சம்மந்தமான அனைத்து நடைமுறைகளும் 'ஸ்டார் 2.0' திட்டத்தின் மூலம் கணினிமயமாக்கப்பட்டுள்ளது.

கூட்டாண்மை நிறுவனத்தினர்கள் தங்கள் இருப்பிடம், அலுவலகத்திலிருந்து இணையவழி உள்நுழைவு (லாக் இன்) உருவாக்கி நிறுவனம் பதிவிற்கான அனைத்து படிவங்களையும் பதிவேற்றம் செய்யலாம். அவ்வாறு பதிவேற்றம் செய்யப்படும் ஆவணங்கள் மாவட்டப்பதிவாளரால் பரிசீலிக்கப்பட்டு உரிய முறையில் இருப்பின் அக்கூட்டாண்மை நிறுவனம் பதிவு செய்யப்பட்டு மின்னனு கையொப்பம் (டிஜிட்டல் ஷிக்னேச்சர்) செய்யப்பட்ட சான்றிதழ் அவர்களின் உள்நுழைவு வழி அனுப்பப்படும்.

இச்சான்றிதழினை கூட்டாண்மை நிறுவனத்தினர் தங்களது உள்நுழைவில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பதிவேற்றம் செய்யப்படும் ஆவணங்களில் ஏதும் குறைபாடு இருப்பின் அதன் விவரத்தை தெரிவித்து இணைய வழி திருப்பி அனுப்பப்படும். அக்குறைபாட்டை சரிசெய்து மீண்டும் பதிவேற்றம் செய்தால் மாவட்டப்பதிவாளரால் பரிசீலிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டு மின்னனு கையொப்பமிட்ட சான்றிதழ் நிறுவனத்தினரின் உள்நுழைவிற்கு அனுப்பப்படும். இதன் மூலம் கூட்டாண்மை நிறுவனங்கள் பதிவு செய்ய மாவட்டப்பதிவாளர் அலுவலகத்திற்கு நேரில் வரவேண்டிய அவசியம் இல்லை.

இதேபோல் சீட்டு நிறுவனங்கள் கால முறையாக நடத்தும் சீட்டு ஏலங்கள் குறித்த ஏல நடவடிக்கை நிகழ்ச்சி நிரல் குறிப்புகள் (மினிட்ஸ்) இணைய தளம் வழியே அனுப்பலாம். நேரில் வரவேண்டிய அவசியம் இல்லை.

இத்தகவலை அவர் தெரிவித்தார்.

சூதாட்ட கும்பலை பிடித்த போலீசாருக்கு 5.9 லட்சம்: கேரள நீதிமன்றம் உத்தரவு

திருவனந்தபுரம், ஜூன் 12

ாட்ட கும்பலை பிடித்த ீசாருக்கு, கைப்பற்றப்பட்ட ில் 9 லட்சத்தை கொடுக்க ன்றம் உத்தரவிட்டுள்ளது.

ளாவின்எர்ணாகுளம்மாவட்டம் வா அருகே உள்ள கிழக்கே தேசம் இடத்திலுள்ள ஒரு கிளப்பில் 2017ம் ஆண்டு சூதாட்டம் பெறுவதாக அப்போதைய ி. ஜார்ஜுக்கு ரகசிய தகவல் த்தது. இதையடுத்து எஸ்.பி. தலைமையிலான போலீசார் இடத்திற்கு விரைந்தனர். அந்த பை முற்றுகையிட்ட போலீசார், ியாக உள்ளே புகுந்து சோதனை பணம் வைத்து சீட்டாடிய கும்பலை கைது செய்த போலீசார், அவர்களிடமிருந்து ரூ. 18,06,280 பணத்தை பறிமுதல் செய்தனர்.

சூதாடியவர்களை கைது செய்த போலீசார் அவர்களை அங்கமாலி குற்றவியல் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். இந்த வழக்கின் தீர்ப்பில் சூதாட்டக் கும்பலை கைது செய்த போலீசாருக்கு கைப்பற்றப்பட்ட பணத்திலிருந்து 9 லட்சத்தை சன்மானமாக வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டது. எர்ணாகுளம் புறநகர் எஸ்.பி. கார்த்திக் கூறுகையில், 9 லட்சத்தை சூதாட்டக் கும்பலை பிடித்த 23 போலீசாருக்கும் சமமாக பங்கிட்டு வழங்கப்படும் என்றார்.

கிணற்றில் தவறி விழுந்த செல்லப் பூனையை உயிரைப் பணயம் வைத்து காப்பாற்றிய 80 வயது முதிய

சென்னை, ஜூன். 12–

செல்லமாக வளர்த்த பூனை 30 அடி ஆழ கிணற்றில் விழுந்ததால் அதனை மீட்பதற்காக தனது உயிரைப் பணயம் வைத்த 80 வயது முதியவரின் துணிச்சல் அனைவரையும் பாராட்ட வைத்துள்ளது.

சென்னை அமைந்தகரையில் நடந்த இந்த சம்பவம் பற்றிய விவரம் வருமாறு:–

சென்னை அமைந்தகரை, அய்யாவு காலனி, அம்மாயி கோவில் தெருவைச் சேர்ந்தவர் டயர்ஸ் (வயது 80). ஓய்வு பெற்ற கல்லூரி பேராசிரியரான இவர் அந்த வீட்டில் 2வது தளத்தில் தனது மகன், மருமகள் மற்றும் மகளுடன் வசித்து வருகிறார். இவரது வீட்டு வளாகத்தில் தரைத்தளத்தில் 30 அடி ஆழம் கொண்ட பழங்கால கிணறு ஒன்று உள்ளது. அதில் சுமார் 3 அடி உயரத்துக்கு தண்ணீர் இருந்தது. டயர்ஸ் விலங்கினங்கள் மீது மிகவும் அன்பு கொண்டவர். அந்த பகுதியில் சுற்றித்திரியும் நாய், பூனைகளுக்கு தினமும் கிணறு அருகில் வைத்து உணவு வழங்கி அன்பு பாராட்டுவார். இதனால் நாய், பூனைகள் அவரையே சுற்றிச்சுற்றி வரும். அவர் உணவளித்து வந்த செல்லப்பிராணிகளில் பூனை ஒன்றிடம் டயர்ஸ் மிகவும் பாசமுடன் பழகி வந்தார். அவரைக் கண்டால் மடியில் வந்து படுத்துக் கொள்ளும் அளவுக்கு அந்த பூனைக்கு அப்படியொரு அளவற்ற பாசம்.

நேற்று பிற்பகல் 3 மணியளவில் அவர் பாசமாக வளர்த்து வந்த அந்த செல்லப்பூனை ஒன்று 30 அடி ஆழ கிணற்றுக்குள் தவறி விழுந்து விட்டது. மியாவ் மியாவ் என அதன் அலறல் சத்தம் கேட்டதும் 2வது மாடியிலிருந்த டயர்ஸ் பூனை கிணற்றுக்குள் விழுந்து தத்தளிப்பதை பார்த்து மனம் கலங்கினார். ஒரு நொடி கூட யோசிக்காமல் அந்த பூனையை உடனடியாக கிணற்றில் இருந்து வெளியே மீட்கும் பணியில் இறங்கினார். அங்கிருந்த சிறிய ஏணியில் கயிற்றைக் கட்டி கிணற்றுக்குள் இறக்கினார். டயர்ஸின் உருவத்தைப் பார்த்த பூனை அந்த ஏணியில் ஏறிக் கொண்டது. மெல்ல மெல்ல ஏணியை மேல தூக்கி பூனை தனது கையால் பிடித்து வெளியே விட்டார். அப்பாடா என பெருமூச்சு விட்டார். ஏணியை மேலே தூக்கிய போது டயர்ஸ் எதிர்பாராத விதமாக நிலைதடுமாறி கிணற்றுக்குள் விழுந்து விட்டார். அவரது அலறல் சத்தம் கேட்டு மகனும், மருமகளும் ஓடிவந்தனர்.

கிணற்றுக்குள் ப விழுந்து கிடப் கண்டு ப அவர்கள் உடன தீயணைப்புத்துறை தகவல் தெரிவித் கீழ்ப்பாக்கம் தீயணை அதிகாரி சிதம தலைமையில் தீயணை வீரர்கள் அங்கு வி வந்தனர். 80 முதியவர் என் அவருக்கு எ ஆகிவிடக்கூடாது என் தீயணைப்பு வீரர்கள் கவனம் செலுத்தியுள்ள கயிற்றில் நாற்காலி உருவாக்கி அதில் ட லாவகமாக அமரவைத்து உ எந்த வித காயமும் இ தீயணைப்பு வீரர்கள் மீட் அதனைக் கண்டு மகிழ்ச்சியல டயர்சின் மகனும், மரும தீயணைப்புத்துறையினர கைகூப்பி கண்ணீருடன் தெரிவித்தனர்.

செல்லமாக வளர்த்த பூனை உயிரை காக்க தனது உயிரை ப வைத்த முதியவர் டயர்சின் சேவை தீயணைப்பு அதிகாரிகள் மற்றும் பகுதி மக்கள் கைதட்டி பாரா சென்றனர்.

பொது அறிவிப்பு

து கட்சிக்காரரர் திரு. கிருஷ்ணவேணி க/பெ.பாபு (லேட்) வரது வழக்கறிஞர் தமிழ்வேந்தன் அறிவிக்கும் பொது அறிவிப்பு கட்சிக்காரரர் நெ.194B, சிங்கபெருமாள் கோவில் சாந்தி தெரு, புரம் என்ற முகவரியில் வசிக்கிறார். எனது கட்சிக்காரரர் பாபு (லேட்) வரது அதிகாரம் பெற்ற இரண்டாவது மனைவி இளவர் மகனும் னர். எனது கட்சிக்காரரின் கணவர் சொத்துக்கள் கீரமண்டபம் வீடு, ாம்பாலைய குடோன் மற்றும் இன்ன பிற சொத்துக்கள் யாரேனும் அதை வாங்கினால் எனது கட்சிக்காரரரை கட்டுப்படுத்தாது. ம் விற்றுவாங்குவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் ந்த சட்ட அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்துகிறேன்.

S.தமிழ்வேந்தன்,
வழக்கறிஞர், சென்னை
செல்: 8682982200

பொது அறிவிப்பு

து கட்சிக்காரர் ஆகிய திருமதி. பங்கஜம், க/பெ. தியாகராஜன், 2, பெரிய சாலை, பொன்னியம்மன் மேடு, சென்னை 600 110. வருகிறார். இவருக்கு சொந்தமான அசல் ஆவணம் செம்பியம் வாளர் அலுவலகத்தில் 22.02.1913 தேதியன்று பதியப் பெற்ற ஆவண எண்.180/1913 ஆவணமும் மற்றும் அதே சார்பதிவாளர் லகத்தில் 04.12.1989 தேதியன்று பதியப் பெற்ற உயில் ஆவண 82/1989 ஆவணமும் கடந்த 10.06.2020 அன்று சென்னை அண்ணா ழிக்கு. A பிளாக், நெ.37ல் வழக்கறிஞரை காண ஆட்டோவில் வந்த தொலைந்துவிட்டது. இதை கண்டெடுப்பவர் எனது முகவரியிலோ து எனது கட்சிக்காரரின் முகவரியிலோ ஒப்படைக்கவும். மேற்படி இந்த ாத்தை கொண்டு எவரேனும் தவறான முறையில் பயன்படுத்தினால் கட்சிக்காரரை கட்டுப்படுத்தாது.

P.A.டில்லிபாபு
வழக்கறிஞர்
No.37, A-Block, 6th Street, Anna Nagar East, Chennai – 600 102.
Madras High Court
Cell No : 97890 98522.

பொது அறிவிப்பு

ஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், வார்சத்திரம் குறுவட்டம் நெ.34, சந்தவேலூர் "ஆ" கிராமம். என்.541/242 பரப்பு 0.29.3 ஹெக்டர் ஏர்ஸ் நிலத்தில் பெட்ரோலியப் பொருட்கள் பெட்ரோலியம் "அ" பிரிவில் லி மற்றும் பெட்ரோலியம் "ஆ" பிரிவில் 35 கிலி லிட்டர் து வைத்து சில்லரை விற்பனை செய்ய தடையில்லா சான்று க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்கிராமத்தில் யாருக்கேனும் சபணை இருப்பின் இந்த விளம்பரம் செய்யப்பட்ட நாளில் து 15 தினங்களுக்குள் சம்மந்தப்பட்ட வட்டாட்சியருக்கோ, ல துணை வட்டாட்சியருக்கோ (or) சுங்குவார்சத்திரம் ட்ட வருவாய் ஆய்வாளர் அலுவலருக்கோ மனு செய்து ளலாம் என இதன் மூலம் விளம்பரம் செய்யப்படுகிறது.

காணவில்லை

குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், காட்டுஎடையார் ம் & அஞ்சல், எண்:157, தெற்குத் தெரு, என்ற முகவரியில் வசிக்கும் த்து குமாரர் கலியபெருமாள் என்கிற நான், எனக்கு சொந்தமான ந்தியம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவான அசல் ஆவண பத்திரம் 619/1986 என்ற அசல் ஆவணத்தினை நகல் எடுக்க ரிஷிவந்தியம் ன். அப்போது மேற்கண்ட அசல் ஆவணம் ரிஷிவந்தியம் பேருந்து த்தில் காணாமல் போய்விட்டது. எங்கு தேடியும் கிடைக்காததால், இது து ரிஷிவந்தியம் காவல்நிலையத்தில் புகார் மனு எண் 159/2020ன் படி /2020 அன்று புகார் மனு கொடுத்துள்ளேன். எனவே இந்த விளம்பரம் 10நாட்களுக்குள் எனது மேற்கண்ட அசல் ஆவணங்கள் கிடைக்க வர்கள் கீழ்கண்ட எனது முகவரியில் அல்லது அருகில் உள்ள காவல் யத்தில் ஒப்படைக்கும்படி கேட்டு கொள்கிறேன்.

கலியபெருமாள். த/பெ.மாரிமுத்து.
எண்:157, தெற்குத்தெரு.
காட்டுஎடையார் கிராமம் & அஞ்சல்.
உளுந்தூர் பேட்டை வட்டம்.
கள்ளக்குறிச்சி மாவட்டம்

11/06/2020

பெயர் மாற்றம்

P.MOHAMED HANIFFA,

தந்தை பெயர்: K.Peer Mohamed, பிறந்த தேதி: 02.01.1958, ப.எண்.413, பு.எண்.572, 8வது தெரு, பி.வி.காலனி, வியாசர்பாடி, சென்னை–600 039, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி P.MOHAMED HANIFA, என்று அழைக்கப்படுகிறேன்.

P.MOHAMED HANIFFA

Sicagen

சிகாஜென் இந்தியா லிமிடெட்

பதிவு அலுவலகம் : 4வது தளம், ஸ்பிக் ஹவுஸ்,
எண்.88, மவுண்ட் ரோடு, கிண்டி, சென்னை -600032.
CIN : L74900TN2004PLC053467

அறிவிப்பு

SEBI (பட்டியலிடும் கடமைகள் மற்றும் அறிவித்தல் தேவைகள்) நிபந்தனைகள், 2015, நிபந்தனை 47(1)(a)ன் படி மற்றவற்றிற்கு இடையில், கீழ்கண்டவைகளை 31.03.2020 உடன் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகள் மற்றும் 2019-20ஆம் ஆண்டுக்கான ஈவுத்தொகையை ஏதேனும் இருப்பின் பரிசீலித்து பரிந்துரைக்க இயக்குனர் குழுவின் கூட்டம் புதன்கிழமை, 17 ஜூன், 2020 அன்று நடைபெற உள்ளது என இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது.

மேற்சொன்ன அறிவிப்பு கம்பெனியின் www.sicagen.com என்ற இணையதளத்திலும், பங்கு வர்த்தக நிறுவனங்களின் www.bseindia.com மற்றும் www.nseindia.com என்ற இணையதளங்களிலும் வெளியிடப் பட்டுள்ளது என இதன் மூலம் அறிவிக்கப் படுகிறது.

சிகாஜென் இந்தியா லிமிடெட்-க்காக
Sd/-
G அருண்மொழி
நிறுவன செயலாளர்

11.06.2020
சென்னை

மேன்மைமிகு வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், விழுப்புரம்.
அ.தி.மு.அ 4/172/2020 .
நாள் 29/5/2020

அன்பரசி, W/o. கருணாகரன்
பெரும்பாக்கம் அஞ்சல்
விழுப்புரம் வட்டம் & மாவட்டம்

மனுதாரர் தெரிவிக்கும் பொது அறிவிப்பு

மனுதாரர் அன்பரசி, W/o கருணாகரன் என்ற நான், எனது மாமனார் ராமசாமி என்பவர் கடந்த 3/1/2007 அன்று மேற்படி கிராமத்தில் இறந்தார்.அப்போது விபரம் தெரியாத காரணத்தால் பதிவு செய்யாமல் விடுபட்டுவிட்டது. தற்பொழுது அவரது இறப்பு சான்று வேண்டி மேற்படி விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளேன். இதில் எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் 15 தினங்களுக்குள் மேற்படி நீதிமன்றத்தில் எழுத்து மூலமோ நேரிலோ ஆஜராகி தெரிவிக்கலாம். தவறினால் இம்மனுவின் எவருக்கும் ஆட்சேபனை இல்லை என ஒருதலை பட்சமாக ஏற்கப்பட்டு உத்தரவு ஆகிவிடும் என்பதை இதன் மூலம் அறியவும்.

அன்பரசி
மனுதாரர்

சுந்தரம் ஃபாஸனர்ஸ் லிமிடெட்

CIN: L35999TN1962PLC004943
பதிவு பெற்ற மற்றும் கார்ப்பரேட் அலுவலகம் : 98A, 7வது தளம், டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை, மயிலாப்பூர், சென்னை - 600 004
தொலைபேசி : +91 - 44 – 28478500 | தொலைநகல் : +91 - 44 - 28478510 | மின்னஞ்சல் : investorshelpdesk@sfl.co.in | இணையதளம் : www.sundram.co

31.3.2020-ல் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட (தனித்த மற்றும் ஒருங்கிணைந்த) நிதிநிலை முடிவுகள்

(₹ கோடிக

வ. எண்	விவரங்கள்	தனித்தது			ஒருங்கிணைந்தது		
		முடிவடைந்த காலாண்டு	முடிவடைந்த ஆண்டு	முடிவடைந்த காலாண்டு	முடிவடைந்த காலாண்டு	முடிவடைந்த ஆண்டு	முடிவடை காலாண்
		31.03.2020		31.03.2019	31.03.2020		31.03.20
		தணிக்கை செய்யப்பட்டது					தணிக்கை செய்யப்பட
1.	வியாபார நடவடிக்கைகளின் மூலம் மொத்த வருமானம்	719.60	3,124.57	1,004.25	830.91	3,723.23	1,142.1
2.	வரி மற்றும் விதிவிலக்கு வகைகளுக்கு முன் நடப்புக் காலத்திற்கான நிகர இலாபம் / (நஷ்டம்)	74.52	387.70	143.86	70.22	393.17	148.4
3.	வரிக்கு முன் மற்றும் விதிவிலக்கு வகைகளுக்குப் பின் நடப்புக் காலத்திற்கான நிகர இலாபம் / (நஷ்டம்)	63.22	376.40	143.86	70.22	393.17	148.4
4.	வரிக்கு பின் நடப்புக் காலத்திற்கான நிகர இலாபம் / (நஷ்டம்)	46.80	314.04	107.35	53.39	326.53	112.8
5.	நடப்புக் காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் {நடப்புக் காலத்திற்கு வரிக்குப்பின் இலாபம் / (நஷ்டம்) மற்றும் வரிக்குப்பின் இதர விரிவான வருமானம் உள்ளடங்கியது}	34.07	290.64	107.32	44.31	309.86	115.7
6.	சமபங்கு மூலதனம் (முக மதிப்பு ரூ.1/- ஒரு பங்குக்கு முழுதும் பெறப்பட்டது)	21.01	21.01	21.01	21.01	21.01	21.0
7.	ஒரு பங்கு வருமானம் (இபிஎஸ்) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட இயக்கங்களுக்கு) (முகமதிப்பு ரூ. 1/- ஒவ்வொன்றும்) (ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை) (ரூபாயில்) அ. அடிப்படை ஆ. டைல்யூட்டட்	2.23 2.23	14.95* 14.95*	5.11 5.11	2.60 2.60	15.46* 15.46*	5.3 5.3

* ஆண்டு விகிதம் செய்யப்பட்டது

குறிப்புகள் :

1. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் பங்கு சந்தைகளுக்கு தாக்கல் செய்யப்பட் விரிவான தனித்த மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் ஆகும். முழுமையான நிதிநிலை முடிவுகள் பங்குச்சந்தைகளின் www.bseindia.co www.nseindia.com மற்றும் நிறுவனத்தின் www.sundram.com போன்ற இணையதளங்களில் கிடைக்கப்பெறும்.
2. மேற்கண்ட 31.03.2020 அன்று முடிவடைந்த ஆண்டுக்கான நிதி நிலை முடிவானது தணிக்கையாளர்களால் தணிக்கை செய்யப்பட்டு சுத்தமான அறிக்கை வெளியிடப்பட்ட

சுந்தரம் ஃபாஸனர்ஸ் லிமிடெட்

இடம் : சென்னை
தேதி : ஜூன் 11, 2020

தலைவர்